# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2010 அக்டோபர் திங்கள் 27.10.2010–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

*முன்னிலை*

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

பொருள் எண் : 1

முப்பெரும் விழாவிற்காக குமரி மாவட்டம் வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மற்றும் துணை முதல்வர் அவர்களையும் வரவேற்கும் விளம்பரம், தினசரி பத்திரிகைகளில் கீழ்குறிப்பிட்டுள்ளபடி விளம்பரம் செய்ததற்கான கட்டணம் வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறரு.

| | | |
|---|---|---|
| (1) தினமுரசு | – | ரூ. 4500.00 |
| (2) மாலை மலர் | – | ரூ. 4125.00 |
| (3) தினகரன் | – | ரூ. 7300.00 |
| (4) தமிழ்முரசு | – | ரூ. 4000.00 |
| மொத்தம் | – | ரூ.19925.00 |

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.5533/2010/இ1)

**தீர்மானம் எண். 1483 வருகைபுரிந்துள்ள இருபது உறுப்பினர்களில், திரு. இயேசுதாசன் அவர்கள் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஏனைய 19 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்ததால் அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 2

குளச்சல் நகராட்சியின் சார்பில் தினத்தந்தி தொழில் மலர் சிறக்க வாழ்த்து தெரிவிக்கும் பொருட்டு விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணமாக ரூ. 5700/– செலுத்த கேட்டுள்ளார். எனவே இத்தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.5847/2010/இ1)

**தீர்மானம் எண். 1484 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 3

இந்நகராட்சி முன்னாள் மின்பணியாளர் நிலை –II ஆக பணிபுரிந்து பின்னர் அனல் மின் நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு.வி.கணேசன் என்பவர் இந்நகராட்சியில் பணிபுரிந்த காலத்தை ஒய்வூதியத்துடன் சேர்த்து ஒய்வூதியம் வழஙக கோரி சென்னை, உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்கு எண். 10657/07–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு திரு.கிருஷ்ணதாஸ், வழக்கறிஞர் ஏற்று நடத்தி வந்தார். 20.09.2010 அன்று மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அன்னார் மேற்படி வழக்கினை ஏற்று நடத்திய வகையில் வழக்கு செலவு தொகையாக ரூ.4000/– கேட்டுள்ளார். மேற்படி தொகை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.5240/2007/சி1)

**தீர்மானம் எண். 1485அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண். 4

கதவு எண்.26/10 என்ற கட்டிடம் சொத்துவரி பதிவேட்டில் திரு.தஙகையன் என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி ஒட்டு கட்டிடத்தின் வரித்தொகை ரூ. 56/– ஒட்டு கட்டிடத்தின் உரிமையாளர் கட்டிடத்தை இடித்து தார்சுக் கட்டிடமாக கட்டி புதிய வரிவிதிப்பு செய்யாமல் பழைய வீட்டு வரித் தொகையை தொடர்ந்து கட்டியுள்ளார். 2008–09–I சொத்துவரி மறுசீராய்வின் போது மேற்படி கட்டிடத்தை புதிய வரிவிதிப்பு செய்தார்கள். ரூ.692/– என வரித்தொகை போடப்பட்டது. இந்த வரித்தொகை அதிகம் என மனுதாரர் வரிக்குறைவு செய்ய மனு செய்துள்ளார். கட்டிடத்தின் பரப்பளவு

569 சதுர அடியாக உள்ளது. கட்டிடம் மண்டலம் C-ல் அமைந்துள்ளது. சதுர அடிக்கு 0.15 பைசா வீதம் 569 சதுர அடிக்கு 427/– ரூபாயாகவும், நூலக வரி ரூ. 42/–ம் சேர்த்து 469/– வரித் தொகை வருகிறது. எனவே கட்டிடத்தின் சொத்து வரியை குறைவு செய்யும் விபரம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.5628/2010/அ1)

**தீர்மானம் எண். 1486 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 5

இந்நகராட்சியில் செயல்படுத்தப்படும் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (SJSRY) வரப்பெற்ற நிதியில் டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தை வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடையினை 20.10.2010 அன்று பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஏலக்கேள்வி கேட்டுள்ளனர்.

| வ.எண். | ஏலதாரர் பெயர் | நகராட்சி நிர்ணயம் செய்த தொகை ரூ. | ஏலக்கேள்வி தொகை ரூ | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. செல்வராஜ், புதுத்தெரு, குளச்சல். | 1910 | 2100/– | ரூ. 25000/– D.D.No.231621 நாள் 19.10.2010. |
| 2 | திரு. பழனி, பண்டாரவிளை, குளச்சல் | | 2050/– | ரூ. 25000/– D.D.No.231624 நாள் 19.10.2010. |

மேற்படி பொது ஏலக்கேள்வி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1439 நாள் 20.08.2010–ல் மேற்படி கடைக்கு மாத அடிப்படை வாடகை மதிப்பு ரூ. 1910/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
2) வரப்பெற்ற இரு ஏலதாரர்களில் திரு.செல்வராஜ், குளச்சல் என்பவர் ரூ. 2100/– மேற்படி கடை வாடகையாக ஏலக் கேள்வியாக கேட்டுள்ளார்.
3) மேற்படி கட்டிடத்திற்கு நகராட்சி நிர்ணயம் செய்துள்ள தொகையை விட கூடுதலாக மாத வாடகையாக ரூ. 2100/– ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.செல்வராஜ், புதுத்தெரு, குளச்சல் என்பவரின் ஏலக் கேள்வியை பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.5731/2003/இ1)

**தீர்மானம் எண்.1487 – இன்னும் அதிக விளம்பரத்துடன் மறு லேலம் விடப்படும் பட்சத்தில் கூடுதல் தொகைக்கு லேலம் கேட்கப்படலாம் என்று உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளமையால், பத்திரிகை விளம்பரத்துடன் மறு லேலம் விடுவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 6

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாகம், பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கீழ்க்கண்ட கடைகளுக்கான உரிமம் 31.10.2010 –ல் முடிவடைந்து விட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (ந.நி.ம) துறை அரசாணை எண்.147 நாள் 30.12.2000–ன்படி மேற்படி கடைகளுக்கான உரிம காலத்தினை 01.11.2010 முதல் 31.10.20013 முடிய மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும், தற்போதைய மாத வாடகையில் 15% உயர்வு செய்யவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | உரிமதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 01.11.2010 முதல் 31.10.2013 முடிய வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 34 | C.S. ராஜ் | 1020/– | 1173/– |
| 2 | 35 | C.S. ராஜ் | 1025/– | 1179/– |
| 3 | 36 | C.S. ராஜ் | 1015/– | 1167/– |
| 4 | 37 | C.S. ராஜ் | 1020/– | 1173/– |
| 5 | 38 | C.S. ராஜ் | 1015/– | 1167/– |
| 6 | 24 | பால்தாஸ் | 1520/– | 1748/– |
| 7 | 1 | பொன்னுமணி | 1210/– | 1392/– |
| 8 | 2 | பொன்னுமணி | 1220/– | 1403/– |
| 9 | 8 | பீர்முகம்மது | 1230/– | 1415/– |
| 10 | 9 | நைனா முகமது | 1235/– | 1420/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 10 | சேகர் | 1220/– | 1403/– |
| 12 | 11 | சேகர் | 1225/– | 1409/– |
| 13 | 13 | ஐனேசியாள் | 1230/– | 1415/– |
| 14 | 14 | செந்தில் குமார் | 1240/– | 1426/– |
| 15 | 15 | முருகேசன் | 1250/– | 1438/– |
| 16 | 16 | ஜாண் நிக்ஷன் | 1250/– | 1438/– |

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2035/2002/அ1)

**தீர்மானம் எண். 1488 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 7

இந்நகராட்சியில் 46 துப்புரவு பணியாளர்கள், 4 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள், மற்றும் 3 ஓட்டுநர்களுக்குமாக மொத்தம் 53 பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு 2 ஜோடி சீருடைகள் வீதம் வழஙகுவதற்கு தேவையான சீருடைகள் நாகர்கோவில் என்டைஸ் விற்பனை நிலையத்திலிருந்து வாஙகுவதற்கும் மற்றும் தையல் கூலி வழஙகுவதற்கும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 75,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதி வழஙகலாம்.

2) அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று சீருடைகள் வாஙகி வழஙகியதற்கும், தையல்கூலி வழஙகியதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.3027/2010/எச்1)

**தீர்மானம் எண். 1489 – அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண். 8

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 50 துப்புரவு பணியாளர்களில் கீழ்காணும் விவரப்படி காலியாக உள்ள 4 து.ப்புரவு பணியாளர் பணியிடஙகளை நிரப்பி கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி கோரி கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | எந்த தேதி முதல் காலியாக உள்ளது. | காரணம் |
|---|---|---|
| 1 | 24.07.2005 | இறப்பு ( எஸ். தஙகப்பன்) |
| 2 | 31.07.2007 | பணி ஓய்வு ( எஸ்.மார்த்தாண்டன்) |
| 3 | 29.05.2010 | இறப்பு ( ஜி.அய்யப்பன் ) |
| 4 | 13.07.2010 | நிரந்தர பணிநீக்கம் ( எஸ். வில்பிரட்) |

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.2622/2009/எச்1)

**தீர்மானம் எண். 1490 – அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண். 9

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முதல் நிலை நகராட்சியான குளச்சல் நகராட்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புராதன நகரம். இந்நகராட்சி 5.18 சதுர மீட்டர் பரப்பளவில் 24 வார்டுகளை கொண்டது. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 23787. மேலும் இந்நகராட்சி கடற்கரை பகுதியினை ஒட்டியதாக அமைந்துள்ளதால் இந்நகராட்சியின் முக்கிய தொழில்களில் மீன்படித் தொழிலும் ஒன்று. தமிழக அரசால் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1998 ஆம் ஆண்டிற்கு பின் இந்நகராட்சிக்கு அரசு நிர்ணயித்துள்ள 50 துப்புரவு பணியாளர்களின் பணியிடஙகளில் தற்போது 46 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 4 துப்புரவு பணியாளர்களின் பணியிடஙகள் காலியாக உள்ளது. தற்பொழுது பணிபுரிந்து வரும் 46 துப்புரவு பணியாளர்களில் 24 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே துப்புரவு பணியில் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 22 துப்புரவு பணியாளர்கள் கீழ்காணும் காரணஙகளின் அடிப்படையில் மாற்றுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**1. குடிநீர் வினியோகப்பணி :-** இந்நகராட்சியில் 11 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும் 17 ஆழ்துளை கிணறுகளும் 3669 குடிநீர் இணைப்புகளும் உள்ளன. தினசரி 26 லட்சம் லிட்டர் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் குடிநீர் பகிர்மானக் குழாய் பொருத்துனர் மற்றும் குடிநீர் பிரிவு காவலர்

பணியிடஙகள் அரசால் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால் தேர்ச்சி பெற்ற துப்புரவு பணியாளர்கள் 10 நபர்கள் குடிநீர் விநியோகம் தொடர்பான பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**2. அலுவலகபணி :-** இந்நகராட்சி பொதுப்பிரிவில் 3 இளநிலை உதவியாளர்கள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் மட்டுமே உள்ளனர். கணினி வசூல், சேவை மையப் பணிகள் மற்றும் இருக்கை பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மூன்று போதிய கல்விதகுதி பெற்ற துப்புரவு பணியாளர்கள் அலுவலகப் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**3. வரிவசூல் பணி :-** இந்நகராட்சியில் 6155 வரிவிதிப்புகள் உள்ளன. இரண்டு வருவாய் உதவியாளர்கள் மட்டுமே தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இரண்டு வருவாய் உதவியாளர்களால் மேற்படி வரிவிதிப்புகள் தொடர்பான பணிகளை முழுமையாக செய்ய இயலாத காரணத்தினால் நகராட்சிக்கு வருவாயை ஈட்டும் பொருட்டு போதிய கல்விதகுதி பெற்ற நான்கு துப்புரவு பணியாளர்கள் இப்பணியில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**4. ஓட்டுநர் பணி :-** இந்நகராட்சியில் குடிநீர் வினியோகத்திற்க்கு ஒரு லாரியும், பொதுசுகாதார பிரிவில் நான்கு மினி டிப்பர் லாரிகளும், அலுவலக பயன்பாட்டிற்க்கு ஒரு ஈப்பும் உள்ளது. அரசால் ஒதுக்கப்பட்ட மூன்று ஓட்டுநர் பணியிடஙகளில் மூன்று ஓட்டுநர்கள் தவிர கூடுதலாக துப்புரவு பணியாளர்களில் இருந்து ஓட்டுநர் உரிமம் பெற்ற இரண்டு துப்புரவு பணியாளர்கள் பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் பிரிவு அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணியில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**5. தெரு விளக்கு பணி :-** இந்நகராட்சியில் 1400 தெருவிளக்குகள் உள்ளது. அரசால் ஒதுக்கப்பட்ட ஒரு மின்கம்பியாளர், ஒரு மின்கம்பி உதவியாளர் தவிர கூடுதலாக துப்புரவு பணியாளர்களில் இருந்து போதிய கல்விதகுதி பெற்ற இரண்டு துப்புரவு பணியாளர் இப்பணியில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**6. இரவு காவலர் பணி :-** இந்நகராட்சிக்கு இரவுக்காவலர் பணியிடம் அரசால் தோற்றுவிக்கப்படாததால், நகராட்சி சொத்துக்களை பாதுகாக்கும் பொருட்டு துப்புரவு பணியாளர்களில் இருந்து ஒரு துப்புரவு பணியாளர் இப்பணியில் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

கடந்த 26.12.2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் இந்நகராட்சி பெரும் பாதிப்புக்குள்ளாகியது. ஏராளமானோர் தஙகள் உயிரையும் உடைமைகளையும் இழந்தனர். சுனாமி பேரழிவினால் ஏற்பட்ட இடிபாடுகளை அகற்றவும், மேற்படி பகுதிகளில் முழுமையான சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும், நகரின் சுகாதாரத்தை முழுமையாக பேணி காப்பதற்கும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:அ/4/2559/2005–நாள்:22.12.2005–ன்படி 15 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு இயற்கை இடர்பாடு நிதியிலிருந்து 22.12.2005 முதல் 15.09.2007 வரை ஊதியம் வழஙகப்பட்டது.

அதன் பின்னர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அர்களின் கடிதம் ந.க.எண்.ஆ2/3396/2005 நாள்:19.11.2007–ல் இயற்கை இடர்பாடு நிதியில் போதிய தொகை இல்லாதிருப்பதால் 15.9.2007–ம் தேதிக்கு பின்னரும் சுகாதாரப் பணிகளை தொடர வேண்டிய அவசியம் இருப்பின் அதற்குரிய செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்நகராட்சியில் ‘‘குப்பை தொட்டி இல்லாத குளச்சல் நகரம்‘‘ திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளதால் நகரின் எந்தவொரு பகுதியிலும் குப்பை தொட்டி வைக்காமல் 4 மினி டிப்பர் லாரிகள் 20 தள்ளுவண்டிகள் மற்றும் 24 துப்புரவு பணியாளர்களை கொண்டு வீடு வீடாக குப்பைகளை மட்கும் குப்பை , மட்காத குப்பை , பிளாஸ்டிக்ஸ் கழிவுகள் என தரம் பிரித்து சேகரிக்கப்படும் பணிக்கு போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் பொது சுகாதாரப் பணிளை முழுமையாக மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. எனவே பொது சுகாதாரப் பணியில் மேற்படி பணியாளர்களின் அவசியத்தை கருத்தில் கொண்டு 17.9.2007–ம் தேதி முதல் பொது நிதியிலிருந்து ஊதியம் வழஙகப்பட்டது. மேற்படி பணியிடஙகளுக்கு ஒவ்வொரு மூன்று மாதஙகளுக்கு ஒரு முறை நகர்மன்ற தீர்மானத்தின்படி கால நீட்டிப்பு செய்யப்பட்டு 89 நாட்களுக்கு தினக்கூலி அடிப்படையில் தற்காலிக பணியாளர்கள் முற்றிலும் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு அவர்களுக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து ஊதியம் வழஙகப்பட்டு வருகிறது.

மேலும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.F-NGL-TECH-38/2009 நாள்:16.12.2010–ன்படியும் கன்னியாகுமரி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 4–ன் படியும்

குளச்சல் நகராட்சியில் 01.04.2010 முதல் பிளாஸ்டிக்ஸ் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி திருநெல்வேலி சங்கர் நகரில் அமைந்துள்ள இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக்ஸ் கழிவுகளை ஊடு எரிபொருளாக பயன்படுத்திட அனுப்புவதற்கு மாவட்ட சுற்றுலா துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நாகர்கோவில், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியமும் இணைந்து இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்துடன் 13.8.2010 –ம் தேதி அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் உள்ள கடைகள், மற்றும் வியாபார நிறுவனங்களில் கண்காணிப்பு குழுவினரால் 01.04.2010 முதல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலமாக பறிமுதல் செய்யப்பட்ட பிளாஸ்டிக்ஸ் (கேரி பேக்குகள் மற்றும் பிளாஸ்டிக்ஸ் டம்ளர்கள் ) மற்றும் இந்நகராட்சி பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்ட குப்பைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக்ஸ் கழிவுகள் சேர்த்து மொத்தம் 0.980 கிலோ கிராம் 11.09.2010 அன்று இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது.

மேலும் தற்போது கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பூஜ்ய கழிவு மேலாண்மை திட்டம் (ZERO WASTE MANAGEMENT) நடைமுறைப்படுத்தப்பட உள்ளதால் குளச்சல் நகரை முழுமையான குப்பை தொட்டி இல்லாத நகராமாக உருவாக்கிடவும், HOT SPOTS உருவாகுவதை தவிர்க்கும் பொருட்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் குப்பைகளை சேகரிப்பதற்கு துப்புரவு பணியாளர்களின் தேவையை கருத்தில் கொண்டு நாளது தேதி வரை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு 15 தினக்கூலி தற்காலிக பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.ப.3) துறை அரசு ஆணை எண்.101 நாள்.30.04.1997–ல் அனுமதிக்கப்பட்ட அளவுகோலின்படி இந்நகராட்சிக்கு 66 துப்புரவு பணியாளர் பணியிடஙகள் தேவைப்படுகிறது. மேலும் சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளில் அதிக அளவில் பொதுமக்களின் நலம் கருதி சுகாதார பணி மேற்கொள்ளப்படவேண்டியிருப்பதாலும் நகரின் பொது சுகாதாரப் பணியில் மேற்காணும் தற்காலிக பணியாளர்கள் பணியிடத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு 17.9.2007–ம் தேதி முதல் நாளது தேதி வரை பொது நிதியிலிருந்து ஊதியம் வழஙகியதற்கு அனுமதியும் பின்னேற்பும் வழஙகவும், மேற்படி 15 தினக்கூலி பணியாளர்களை தொடர்ந்து பணிபுரிவதற்கு நீட்டித்து உரிய அனுமதி வழஙகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண்: எச்1/2764/2005)

**தீர்மானம் எண். 1491 – அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண். 10

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள Bore –லிருந்து துறைமுகத்தெருவில் சர்ச் அருகிலுள்ள டாஙக்–கிற்கு தண்ணீர் செல்கின்ற பிரதான குழாயில் உடைவு ஏற்பட்ட காரணத்தினால் துறைமுகத்தெருவில் குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் துறைமுகத்தெரு குறுகலான தெருவாக இருப்பதால் நகராட்சியில் உள்ள டாஙகர் லாரி மூலம் தண்ணீர் சப்ளை செய்ய முடியவில்லை. எனவே குடிநீரின் அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் நகர்மன்றத் தலைவர் அறிவுறுத்தல் மற்றும் ஆணையர் மற்றும் பொறியாளர் அறிவுரைப்படி, அப்பகுதி மக்களுக்கு 25.08.2010, 26.08.2010 ஆகிய இரு தினஙகள் வாடகை மினிலாரி மூலம் 13 லோடு தண்ணீர் விநியோகம் செய்த வகையில் லோடு ஒன்றுக்கு ரூ. 300/– வீதம் 13 லோடுக்கு மொத்த செலவுத் தொகை ரூ. 3900/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.5363/2010/இ1)

**தீர்மானம் எண். 1492 – அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண். 11

இந்நகராட்சி கணனிப் பிரிவில் இயஙகி வரும் U.P.S.க்கான 10 பேட்டரிகளில் 2 பேட்டரிகள் செயலிழந்து காணப்படுவதாக UPS பொறியாளர் கூறியுள்ளார். அதனால் UPS திடீரென்று OFF ஆகிவிடுகிறது. UPS வாஙகி 3 வருடஙகள் ஆகிவிட்டபடியினாலும், மேலும் மீதமுள்ள பேட்டரிகளும் பழுதாகாமலிருக்க அவசர அவசியம் கருதி இரண்டு பேட்டரிகள் (100 AH) சுமார் ரூ. 18,000/– செலவில் வாஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.3562/2007/அ2)

**தீர்மானம் எண். 1493 – அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண். 12

இந்நகராட்சியில் கணனி, பிரிண்டர் மற்றும் நெட் ஒர்க் கருவிகளுக்கான வருடாந்திர பராமரிப்பு செலவு (AMC) நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவவகத்திலிருந்து பெறப்படும் குறிப்பிற்கு ஏற்ப தொகை வழஙகப்பட்டு வந்தது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் CMA/ITC/003139/07 நாள் 07.10.2010 கடிதத்தில் அந்தந்த உள்ளாட்சிகளே வருடாந்திர பராமரிப்பிற்கான (AMC) ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள கூறியுள்ளார்கள். எனவே உத்தேச வருடாந்திர பராமரிப்பு செலவு கீழ்க்கண்டவாறு ஏற்படலாம்.

| | |
|---|---|
| ஒரு கணனிக்கு ரூ. 3000/– வீதம் 8 கணனிகள் | ரூ. 24,000/– |
| LCD மானிட்டர் கணனி 1–க்கு ரூ. 3500/– வீதம் 4 கணனிகள் | ரூ. 14,000/– |
| சர்வர் கணனி 1–க்கு ரூ. 9500/– | ரூ. 9,500/– |
| லேசர் பிரிண்டர் ரூ. 2000/– வீதம் 3–க்கு | ரூ. 6,000/– |
| டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் ரூ.1500/– வீதம் 3–க்கு | ரூ. 4,500/– |
| மொத்தம் | ரூ. 58,000/– |

மேற்படி கணனிகளுக்கான வருடாந்திர பராமரிப்பு செலவு (AMC) ரூ.58,000/– ஆகும். அடிக்கடி சர்வர் மற்றும் கணனி பழுதடைவதாலும், அதனை நிவர்த்தி செய்ய (AMC) வருடாந்திர பராமரிப்பு தேவைப்படுவதால் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

(ந.க.எண்.544/2006/அ2)

**தீர்மானம் எண். 1494 – அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண். 13

இந்நகராட்சி பகுதியில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக இந்நகராட்சிக்கென சொந்தமாக புகை மருந்து அடிக்கும் இயந்திரம் இல்லாத காரணத்தால் நகரின் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு PULS FOG 5 லிட்டர் அளவு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் ஒன்றை வாஙகுவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.95,000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.3702/2009/எச்1)

**தீர்மானம் எண். 1495 – அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2010 அக்டோபர் திங்கள் 28.10.2010–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

*முன்னிலை*

திரு.ஜே.ஜேசையா,பி.எஸ்ஸி., டி.பி.எம்.,
நகர்மன்ற தலைவர்.

பொருள் எண் : 1

இந்நகராட்சி பணியாளர்கள் கீழ்க்காணும் விவரப்படி அலுவலக பணியாக வெளியூர் சென்ற பயணங்களுக்கான பயணப்படித் தொகை ரூ..11462/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பதவி | மாதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.கே.யு.சிந்தாமதார் | மேலாளர் | 9/2010 | 3144/– |
| 2 | திரு.வெ.கண்ணையா | நகராட்சி பொறியாளர் | 6/2010<br>7/2010 | 2924/–<br>2034/– |
| 3 | திரு.பி. வீரமணி | துப்புரவு ஆய்வாளர் | 9/2010 | 979/– |
| 4 | திரு.ஆர்.சிவகுமார் | சமுதாய அமைப்பாளர் | 8/2010<br>9/2010 | 1426/–<br>292/– |
| 5 | திரு.ச. ராமு | அலுவலக உதவியாளர் | 9/2010 | 663/– |
| | | மொத்தம் | | 11462/– |

அலுவலகக்குறிப்பு – மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.130/2010/எச்1)

**தீர்மானம் எண். 1496 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.48699/2010/ஜே2 நாள் 20.10.2010–ல், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ஆர்.எண்.112194/SBHI-1/SE/2010 நாள் 24.09.2010–ல் தெரிவித்துள்ளபடி அரசாணை M.S.No.528 சுகாதாரம் நாள் 29.12.2000–ன்படி, இந்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பிறப்பு இறப்பு சான்று படிவஙகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படலாகாது எனவும், அவ்வாறு மாற்றம் செய்யப்படுவது 2000–ம் ஆண்டு தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதி மற்றும் சட்டத்திற்கு முரண்பட்டதாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.3510/2009/எச்1)

**தீர்மானம் எண். 1497 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண் : 3

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11–ன்கீழ் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.இ3/333/2010 நாள் 16.07.2010–ன்படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன்படி துறைமுகத் தெருவில் படிப்பகம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்ட தளத்தில் OHT பக்கம் கருஙகல்லினால் ஆன சுற்றுச்சுவர் உள்ளது. இந்த சுற்றுச்சுவர் அமைத்து பல ஆண்டுகளாகி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே அதனை இடித்து மாற்றவும், இடித்து மாற்றிய கருஙகல்லை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி எடுத்துக் கொள்ளவும், பொது ஏலத்தில் விடுவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

**தீர்மானம் எண். 1498 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 4</u>

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் பொட்டல் பாலத்தன்கரையில் உள்ள சாலையை ஏற்கனவே இரண்டு கட்டங்களாக, அதாவது O & M Gap Filling Fund 2008–09–ம் ஆண்டு நிதியில் 123 மீட்டர் நீளமும், பொதுநிதி 2010–11–ன்கீழ் 160 மீட்டர் நீளமும் உள்ள மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. தற்போது 3–ம் கட்டமாக 45 மீட்டர் நீளம் உள்ள மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்ற தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.5896/2010/இ1)

**தீர்மானம் எண். 1499 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 5</u>

குளச்சல் நகராட்சியில் இயக்குதலும், பேணுதலும் இடை நிரப்புதல் நிதி 2010–2011–ல் பணிகள் தேர்வு செய்து மதிப்பீடுகள் தயார் செய்து பிரேரணை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.41970/2010/பி3 நாள் 20.09.2010–ல் தெரிவித்ததின்படி விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடு தயார் செய்து பிரேரணை சமர்ப்பிக்க ஆன மொத்த செலவுத் தொகை ரூ. 20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.

( ந.க.எண்.5898/2010/இ1)

**தீர்மானம் எண். 1500 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 6</u>

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11–ல் அஙகன்வாடி மைய எண். 85 மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் அஙகன்வாடி மையம் கடந்த 2004 சுனாமி பேரலையின்போது தாக்குதலுக்கு உட்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே குழந்தைகளின் நலன் கருதி அஙகன்வாடி மையத்தில் பராமரிப்பு பணிகள் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 55,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழஙகலாம்.

( ந.க.எண்.5928/2010/இ1)

**தீர்மானம் எண். 1501 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 7</u>

குளச்சல் நகராட்சியில் பொன்விழா ஆண்டு நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம் (SJSRY) 2010-11-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து மாதா காலனி வடக்குத் தெருவில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.1,60,000/– ல் கட்டுமானப் பொருட்கள் வினியோகம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,300/– மேற்படி தொகைக்கு 23.10.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை பின்வருமாறு:

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. எஸ். ஜாண்றோஸ் | 0.18% மதிப்பீட்டைவிட குறைவு. (ரூ.99850.81) |
| 2 | திரு.சி. செல்ல நாடார் | 9.99% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ.105028.50 ) |

இதில் திரு.எஸ். ஜாண்றோஸ் என்பவர் 0.18% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

(1) மேற்படி பணியின் மதிப்பீட்டுத் தொகைக்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1447 நாள் 20.08.2010–ல் ஏற்கெனவே ஒப்புதல் வழஙகியுள்ளது.

(2) திரு.எஸ். ஜாண்றோஸ், ஒப்பந்தக்காரர் 0.18% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க.எண்.4463/2003/எச்2)

**தீர்மானம் எண். 1502 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 8

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை அருகே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–11–ன்கீழ் கலையரஙகம் கட்டப்பட்டது. அதில் இரு பக்கமும் திறந்த நிலையில் உள்ளதினால் இரண்டு பக்கம் ரோலிங சட்டர் அமைப்பதற்கும், தரையில் டைல்ஸ் பதிப்பதற்கும், Electrical arrangements செய்வதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.90,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்.5897/2010/இ1)

**தீர்மானம் எண். 1503 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

பொருள் எண் : 9

12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டபடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வருடம் | நிதி ஒதுக்கீட்டு விபரம்<br>ரூ. |
|---|---|
| 2005–06 | 12,63,442/– |
| 2006–07 | 12,63,442/– |
| 2007–08 | 4,59,472/– |
| 2008–09 | 4,80,988/– |
| 2009–10 | 4,80,988/– |
| மொத்தம் | 39,48,332/– |

2005–06 முதல் 2009–10 வரை .திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 39,48,332/– ஆகும். இதில் 2006–07–ல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் ஒரு பணியும், 2007–08–ல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் ஒரு பணியும் எடுத்து பணி செய்து முடிக்கப்பட்டதில் இரண்டு பணிகளுக்கும் மொத்த செலவுத் தொகை ரூ. 6,35,722/– ஆகும். இதில் ஒதுக்கீட்டுத் தொகையில் செலவு போக மீதமுள்ள தொகை ரூ.33,12,610/– ஆகும். மேற்படி தொகைக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித்தலைவரால் இந்நகராட்சிக்கு இலவசமாக வழஙகப்பட்ட 10 ஏக்கர் பரப்பளவில் உப்பளம் புறம்போக்கு நிலத்தில் (சர்வே எண். 204/10 ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் தடையில்லா சான்று (Lr.No.F-NGL-01/10 Dated 11.06.2010) பெறப்பட்ட இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்கொள்ள முதற்கட்டமாக கீழ்க்கண்டப்படி பணிகள் செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | சிவப்பு கிராவல் மண் அடித்து நிரப்பும் பணி செய்தல் | ரூ. 24,50,000/– |
| 2 | சுற்றுச்சுவர் அமைக்கும் பணி செய்தல் | ரூ. 12,50,000/– |
| 3 | மொத்தம் | ரூ. 37,00,000/– |

மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 37,00,000/– ல் 12–வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் தற்போது மீதம் உள்ள தொகை ரூ. 33,12,610/– போக ரூ.3,87,390/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். 1600/2008/அ2)

**தீர்மானம் எண். 1504 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே.ஜேசையா
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி